# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.5/2025</u>

2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அய்யாதுரை | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:

விபத்தில் இறந்துபோன இளையராஜா எனக்கு பழக்கம் கிடையாது. நான் ஷேர்ஆட்டோ ஓட்டிவருகிறேன். நான் அன்றைனைக்கு ஷேர்ஆட்டோவில் எங்கெங்கு சென்றேன் என்று அட்டவணையில் எழுதிவைப்பேன். விபத்து சமயத்தில் விபத்து நடந்த இடத்தின் வழியாக சென்றேன் என்பதை காட்டக்கூடிய அட்டவணையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னை தாண்டி ஒரு வெள்ளை கலர் வாகனம் சென்றது. அதனுடைய பதிவெண் அப்போது எனக்கு தெரியாது. அந்த பேருந்து யாருக்கு சொந்தமானது என்று அப்போது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அது அரசுபேருந்து SETC ஆகும். விபத்து நடந்த சாலை திருச்சி சென்னை நெடுஞ்சாலையில் கீழ்புறம் நடந்தது. நான் ரோட்டின் மத்தியில் உள்ள வெள்ளைக்கோட்டிற்கு இடதுபுறமாக சென்றுகொண்டிருந்தேன். அப்போது

வெள்ளைக்கலர் பேருந்து என்னை முந்திசென்றது. எனக்கு முன்புறம் இடதுபுறத்தில் ஜல்லிகள் கொட்டப்பட்டிருந்தது. இளையராஜா ஜல்லியில் விழுந்து எழுந்து நிற்கும் போது பேருந்து மோதியதாக நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ளேன். பேருந்து அந்த இடத்தில் நிற்காமல் போய்விட்டது. அந்த இடத்தில் என்னை தவிர வேறு யாருமில்லை. விபத்து சம்மந்தமாக நான் 100க்கு தகவல்கொடுத்தேன். அதைதவிர வேறு யாருக்கும் தகவல்சொல்லவில்லை. போலிசில் நான் புகார் கொடுக்கவில்லை. சாட்சி சம்பவஇடத்திற்கு போலிசார் வந்துவிட்டதாக கூறுகிறார். போலிசார் என்னை பலமுறை விசாரித்தார்கள். வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்று எனக்குதெரியாது. விபத்து சம்மந்தமாக வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. வந்த போலிசாரிடம் வெள்ளைக்கலர் பேருந்து மோதியதாக சொன்னேன். விபத்து நடந்த பகுதியில் போலிசாரால் வைக்கப்பட்ட கண்காணிப்பு கேமரா இல்லை. வேறு வகையான கேமரா இருந்ததா என்று எனக்கு தெரியாது. இளையராஜா மனைவி தகவல் சொல்லி நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ளது போன்று அரசு பேருந்து விபத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர்கள் குடும்பத்திற்கு உதவவேண்டும் என்பதற்காக அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.